1990 ஏப்ரல் 61

கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்கள்.

*5220. திரு. ப. முத்துசாமி :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமப் பகுதிகளில் ஏற்படும் நிலம் தொடர்பான பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, நீண்டகாலத்திற்கு முன்னால் தமிழகத்தில் கிராமப் பஞ்சாயத்துக்கள் நீதிமன்றங்களாக செயல்பட்டு வந்திருக்கின்றன. குறிப்பாக நிலம் சம்பந்தமான வாய்க்கால் தகராறு, வரப்பு தகராறு, கூலித் தகராறு சம்பந்த மான சிறு வழக்குகள்விஸ்வரூபமாகி கடைசியில் கிரிமினல் வழக்கு களாகி, நீண்டகாலமாக முடிக்கப்படாமல் இருப்பதால் கிராமப் புறங்களில் விவசாயிகள் அந்த வழக்குகள் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே இப்படிச் சிறு வழக்குகளைக் கிராம அளவிலே முடிப்பதற்குக் கிராமப் பஞ்சாயத்து நீதிமன்றங்களைஅரசு ஏற்படுத்த இனியாவது முயற்சிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

9–40 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் 1950, பிரிவு 132-ன் படி ஊராட்சிகள் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளாக செயல்பட்டு வந்தன. ஊராட்சித் தலைவரும், ஊராட்சி துணைத் தலை வரும், ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், அந்த நீதிமன்றங் களிலே அலுவல் சார்புள்ள தலைவராகவும், துணைத் தலைவ ராகவும், உறுப்பினர்களாகவும் இருந்து வந்தார்கள். 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, மேற்படி சட்டப் பிரிவு 191 (1) மற்றும் (2), இதன்படி ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் அமைக்கப்பட்ட பின்னர் அனைத்து ஊராட்சிகள், 1888ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராமக் கோர்ட்டு சட்டத்தின் பிரிவு 9(1)-ன்படியான காரியங்களுக்காக பஞ்சாயத் துக் கோர்ட்டுகளாக செயல்பட்டு வந்தது நிறுத்தப்பட்டுவிட்டது. அக்காலக் கட்டத்தில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் நிலுவையில் இருந்த வழக்குகள் அனைத்தும், தமிழ்நாடு கிராமக் கோர்ட்டுகள் சட்டம் 1888 பிரிவு 9(1)-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு மாற்றப்படும் என்று அறிவிக்கப் பட்டது. அவ்வாறன கோர்ட்டுகளை ஏற்படுத்தவில்லை என்றால்

மேல்குறிப்பிட்ட சட்டப் பிரிவு 7-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட கிராம முன்சீப் கோர்ட்டுகளுக்கு மாற்றப்பட வேண்டும் என அப்போது ஆணையிடப்பட்டது. ஆனால், கிராம முன்சீப் கோர்ட்டுகளோ, அல்லது பஞ்சாயத்து நீதிமன்றங்களோ இது வரையில் ஏற்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலம் தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கும் பணிகளை தற்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் செய்து வருகின்றன.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கிராமப் பகுதிகளிலே ஏற்படுகின்ற வழக்குகளுக்கு கிராம அளவில் தீர்க்கக்கூடிய முறையை ஏற்படுத்தினாலொழிய அந்த வழக்குகள் நீண்டகாலம் நிலுவையில் இருந்து தீர்க்கப்படாமல் பெரும் அவதிக்கு ஆளாகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே இனிமேலாவது பரிசீலித்து கிராம அளவிலே ஏற்படக்கூடிய சிறிய வழக்குகளை அங்கேயே தீர்க்கக்கூடிய ஒரு நல்ல முறையை இந்த அரசு ஏற்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே அரசியல் தலையீடு அதிகமாக ஏற்பட்ட காரணத்தால், ஏற்கெனவே இப்படி நடந்துவிட்ட நிலையில், ஏற்கெனவே நடந்துகொண்டு வந்து வழக்குகளின் நிலையில் ஆங்காங்கு உள் கோஷங்கள் ஏற்பட்டு ஊராட்சி மன்றங்களும் இரண்டு மூன்றாகப் பிரிந்து அந்தக் காரணத்தால் அந்த மன்ற நடவடிக்கைகூட தடைப்படுகின்றநிலை ஏற்பட்டதால்தான், அது இப்படி நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்று நான் அறிகிறேன். உள்ளபடியே மன்றம் பரிசீலிக்க வேண்டிய நிலை வந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

பேரூராட்சிகளுக்கு நிதி ஈடு.

*6524. திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வினால் கூடுதல் செலவினை எதிர்நோக்கியுள்ள பேரூராட்சிகளுக்கு நிதி ஈடு செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளின் நிதி நிலையைப் பெருக்குவதற்காக ஆலோசனை கூறும் பொருட்டு, அரசு திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களை தலைவராக கொண்ட வல்லுநர் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இக் குழு